# ஒழுக்கம் விழுப்பம் தரும்

வளர்நிலை - 9

“ஒழுக்கம் விழுப்பம் தரலான்

ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்"

என்பது வள்ளுவர் வாக்கு. ஒருவனது வாழ்வின் உயர்வை, அவனது வாழ்வின் வெற்றி தோல்வியை ஒழுக்கமே நிர்ணயம் செய்கிறது. சீரிய வாழ்வுக்குச் சிகரமாக அமைவது சிறந்த ஒழுக்கமேயாகும் என்றால் அது மிகையல்ல. இதனாலேயே ஒல்காப் புகழ்மிகு தொல்காப்பியரும் “உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே” என்றார்.

ஒருவனிடம் எத்தனை செல்வங்கள் இருந்தாலும், அவனிடம் ஒழுக்கம் இல்லையென்றால் உயர்வும் சிறப்பும் இல்லாமல் போகிறது. மனிதன் மனிதனாக வாழ்வதே தலைசிறந்த ஒழுக்கம். இதனை நாம் உள்ளத்தில் நன்கு பதித்துக் கொள்ளுதல் வேண்டும். பல்வேறு திறமைகளைக் காட்டிலும் பல்வேறு பதவிகளைக் காட்டிலும் ஒருவனுக்கு ஒழுக்கமே சிறந்ததாக வேண்டப்படுகிறது.

உலகம் மதித்துப் போற்றும் வகையில் நாம் வாழ வேண்டும். மற்றவர்கள் பார்த்துப் பழிக்கும் வகையில் நம் வாழ்வு அமையக் கூடாது. இறந்தும் வாழ்வதே நம் வாழ்வின் இலட்சியமாக அமைய வேண்டும். இறந்தும் நாம் வாழ வேண்டுமாயின் இருக்கும் போதே மேன்மையான வாழ்வை வாழ வேண்டும். அந்த மேன்மை ஒழுக்கத்தின் வழியாகவே வரும். இதனையே வள்ளுவரும் “ ஒழுக்கத்தில் எய்துவர் மேன்மை” எனக் குறிப்பிட்டுள்ளார்.

பொருளீட்டுவது வாழ்வின் நோக்கமாயினும் அதன் மூலம் புகழீட்டுவதே நமது குறிக்கோளாக இருத்தல் வேண்டும். பொருள் வழியே புகழ் வரவேண்டுமாயின் ஒழுக்கத்தை உயிரினும் மேலாக நாம் மதித்துப் பேண வேண்டும். ஒழுக்கம் உடையோர் நிச்சயம் உயர்வடைவர். “ நீ எதை மதிக்கிறாயோ அது உன்னை மதிக்கும்" என்பது முதுமொழி. ஒழுக்தை உயர்வாக, உயிராக மதிப்போருக்கு ஒழுக்கம் உயர்வு தரும் என்பது திண்ணம்.

ஒவ்வொரு துறையிலும் உயர்ந்து விளங்கும் உத்தமர்களின் வாழ்க்கை வரலாறுகளைப் பார்ப்போமாயின் அவர்களின் உயர்வுக்கு ஒழுக்கமே அடிப்படையாக அமைந்திருந்தமையை நாம் உணரலாம். ஒழுக்கத்தைப் பேணுவோர் உயர்வர், அல்லாதோர் பழி எய்தி வாழ்வில் பாழ்பட்டழிவர் என்ற உண்மையை எந்நாளும் நினைவில் கொண்டு வாழ்வோமாயின் நமது வாழ்வு வளம் பெறும் என்பதில் ஐயமில்லை.

ஒழுக்கம் பேணி உயர்வடைவோம்!

நன்றி, வணக்கம்!